### தமிழுணர்வையும் – தனித்த நம் பண்பாட்டையும் இளைஞர்கள் உணர்ந்து கொள்ள

# ‘வேள்பாரி’ போன்ற படைப்புகள் உருவாக வேண்டும்!

## நூலின் ஆசிரியர் சு.வெங்கடேசன் எம்.பி.யை வாழ்த்தி – முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப் பதிவு!

**சென்னை, ஜூலை 15-**

**ஒரு லட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகி வரும் “வேள்பாரி” நூலின் ஆசிரியர் சு.வெங்கடேசன் எம்.பி.யை வாழ்த்தி வலைதளத்தில் பதிவிட்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், “தமிழுணர்வையும் - தனித்த நம் பண்பாட்டையும் இளைஞர்கள் உணர்ந்து கொள்ள “வேள்பாரி” போன்ற படைப்புகள் உருவாக வேண்டும்!” என்று குறிப்பிட்டுள்ளார்.**




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு :-

வாசிப்புப் பழக்கம் குறைந்துவிட்டது எனப் பலரும் குறைபட்டுக் கொள்ளும் காலத்தில், ஒரு இலட்சம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாகிச் சாதனை படைத்திருக்கிறது ‘வீரயுக நாயகன் வேள்பாரி’!

தொடராக வெளிவந்தபோதே படித்தவர்களையும் இணையப் பக்கத்தில் படித்தவர்களையும் சேர்த்தால் இந்த எண்ணிக்கை பல மடங்காகும்! அத்தனை பேருள்ளும் சகோதரர் சு.வெங்கடேசன் அவர்களின் எழுத்து ஏற்படுத்திய தாக்கத்தால்தான், பலரும் தங்களது குழந்தைகளுக்கு வேள்பாரி மாந்தர்களின் பெயர்களைச் சூட்டியுள்ளனர்!

தமிழுணர்வையும் தனித்த நம் பண்பாட்டையும் இளைஞர்கள் உணர்ந்து கொள்ள வேள்பாரி போன்ற படைப்புகள் உருவாக வேண்டும். பல இளம் எழுத்தாளர்கள் உருவாகி அத்தகைய படைப்புகளைக் கொடுத்திட வேண்டும்!

தன் சாதனையைத் தானே விஞ்சும் அளவில் சகோதரர் சு.வெங்கடேசன் தனது அடுத்த படைப்புகளை எழுதிட இப்போதே வாழ்த்துகிறேன்!

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

# பா.ஜ.க. புகுந்தால் தமிழ்நாடே நாசமாகிவிடும்!

## ஒன்றிய முன்னாள் அமைச்சர் ப.சிதம்பரம் எச்சரிக்கை!

குடியாத்தம்,ஜூலை 15-

தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களுக்கு, நிதிப் பகிர்வில் ஒன்றிய பா.ஜ.க. அரசு வஞ்சனை செய்கிறது என்று முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் குற்றம் சாட்டியுள்ளார்.

வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் காங்கிரஸ் கட்சியின் பொதுக்கூட்டம் நடைபெற்றது. இதில், தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை, முன்னாள் ஒன்றிய அமைச்சர் ப.சிதம்பரம் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்றனர்.



அப்போது பேசிய ப.சிதம்பரம், ஒன்றிய பா.ஜ.க. அரசு அரசியல் சாசனப்படி ஆட்சி செய்யவில்லை என்று விமர்சித்தார்.

ஆபரேஷன் சிந்தூர் குறித்து, நாடாளுமன்றத்தைக் கூட்டி ஒன்றிய அரசு ஏன் விளக்கம் அளிக்கவில்லை என்றும் அவர் கேள்வி எழுப்பினார். கூட்டணி ஆட்சி தொடர்பாக அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.க. கூட்டணிக்குள் சர்ச்சை எழுந்துள்ளதாக குறிப்பிட்ட ப.சிதம்பரம், தமிழ்நாட்டிற்குள் பாஜக புகுந்தால் தமிழ்நாடே நாசமாகிவிடும் என்று தெரிவித்தார்.

### தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில்

# திருவண்ணாமலையில் புதிய நகரப் பேருந்துகள்!

## துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் தொடங்கி வைத்தார்!

திருவண்ணாமலை, ஜூலை 15-

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவண்ணாமலையில் அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் 2 புதிய வழித்தடங்களில் மகளிர் விடியல் பயணத் திட்ட புதிய நகரப் பேருந்துகளையும், 4 வழித்தடங்களில் புதிய குளிர்சாதன புறநகர் பேருந்துகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (13.7.2025) திருவண்ணாமலை தென்மாத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் மகளிர் மற்றும் மருத்துவமனை செல்லும் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தென்மாத்தூரிலிருந்து அருணை கல்லூரி, சரோன் புறவழிச் சாலை, திருவள்ளுவர் சிலை, காந்தி நகர், பெரியார் சிலை. மத்திய பேருந்து நிலையம், மின்வாரிய அலுவலகம், வேங்கிகால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், மருத்துவ கல்லூரி வழியாக தீபம் நகர் வரை தினசரி 28 நடைகள் இயக்கப்படும் வகையில் 2 மகளிர் விடியல் பயண புதிய நகரப் பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மேலும் இந்நிகழ்ச்சியில் திருவண்ணாமலை - கிளாம்பாக்கம் இடையே இயக்கப்பட்டு வரும் 122 ACA. 122 ACD, 122 KH ஆகிய வழித்தடங்கள், திருவண்ணாமலை கோயம்புத்தூர் இடையே இயக்கப்பட்டு வரும் 434 B ஆகிய வழித்தடங்களில் 4 புதிய குளிர்சாதன புறநகரப் பேருந்துகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சிறப்புத் திட்டமான மகளிர் விடியல்பயணத்திட்டத்தின் கீழ் 128 நகர பேருந்துகள் தற்போது இயக்கப்பட்டு,

நாள் ஒன்றிற்கு சராசரியாக 77 ஆயிரம் மகளிர் பயணம் மேற்கொண்டு வருகின்றார்கள். திருவண்ணா மலை மாவட்டத்தில் இது நாள் வரை விடியல் பயணத்திட்டத்தின் மூலம் 11 கோடியே 29 லட்சம் மகளிர் கட்டணமில்லாமல் பயணம் மேற்கொண்டுள்ளார்கள்.

மகளிர் விடியல் பயணம் திட்டம் தொடங்கப்பட்ட போது திருவண்ணாமலை மாவட்டத்தில் நகரப் பேருந்துகளில் பயணம் செய்யும் மகளிர் எண்ணிக்கை 61 சதவிகிதமாக இருந்தது, தற்போது 80 சதவிகிதமாக உயர்ந்துள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்நிகழ்வில் பொதுப் பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, சட்டப்பேரவை துணைத் தலைவர் கு.பிச்சாண்டி, மாவட்ட ஆட்சித் தலைவர் க.தர்ப்பகராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் இராம்பிரதீபன், உதவி ஆட்சியர் (பயிற்சி) செல்வி அம்ருதா எஸ்.குமார், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (விழுப்புரம்) மேலாண் இயக்குநர் கே.குணசேகரன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எடப்பாடி பழனிச்சாமி விரக்தியின் விளிம்பில் இருக்கிறார்!

# புதிய கூட்டணிகள் அமையும் என எதிர்பார்த்தது அமையவில்லை!

## அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் பேச்சு!

அரியலூர்,ஜூலை 15-

அரியலூர் நகராட்சிக் குட்பட்ட வார்டுகளில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சார துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் பல்வேறு இடங்களில் மக்கள் நலத்திட்ட பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

பின்னர் செய்தியாளர்களை சந்தித்தார். அப்பொழுது தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேசியதாவது:

எடப்பாடி பழனிச்சாமி விரக்தியின் விளிம்பில் இருக்கிறார் முதல் நாள் பேசுவதை மறுநாள் மறுத்து பேசுகிறார் வேறொரு நாள் வேறொரு புது கதையை அவர் திரித்து பேசுகிறார் அவரது ஒவ்வொரு நாள் வீடியோவும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவர் எந்த அளவிற்கு விரக்தியின் விளிம்பில் இருக்கிறார் என்பது தெரிகிறது அவர் புதிய கூட்டணிகள் அமையும் என எதிர்பார்த்தது அமையவில்லை பாஜகவினர் அவர்கள் தோளில் ஏறி உட்கார்ந்து கொண்டு பாஜகவின் கொள்கைகளை எடப்பாடி பேசுகின்ற நிலைக்கு கொண்டு வந்து விட்டுவிட்டார்கள் அவர் தூக்கும் சுமை தாங்காமல் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணி வலுவாக இருக்கிறது என்பதை பார்த்து எல்லோரையும் விமர்சனம் செய்யும் நிலைக்கு போய்விட்டார் அவர் நினைத்தது நடக்கவில்லை விரக்தியின் விளிம்பில் இருக்கிறார் எனவே இதை எல்லாம் பேசிக் கொண்டிருக்கிறார் என கூறினார்.



சீமான் மக்களை மாக்களாக நினைத்து தான் பேசுவார். அவர் மனிதர்களாக நினைத்து பேச மாட்டார் அவர் வாய்க்கு வந்ததெல்லாம் பேசுவார் இன்றைக்கு அவரின் உண்மை நிலை வெளிப்படுத்தும் வகையில் ஆடு மாடுகளுக்கு முன்னால் பேசி வருகிறார் அவரது கடைசி கட்டம் நெருங்கி வருவதை இது காட்டுகிறது என கூறினார்.

### திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில்

# சரக்கு ரயில் தீ விபத்து! அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நேரில் ஆய்வு!

## அருகாமையில் உள்ள வீடுகளில் இருந்து சிலிண்டரை தூக்கிச் சென்று மீட்பு பணியில் ஈடுபட்டார்!

திருவள்ளூர், ஜூலை 15-

சென்னை மணலியிலிருந்து எரிபொருள் ஏற்றிச் சென்ற சரக்கு ரயில் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் தடம்புரண்டு தீ விபத்து ஏற்பட்டது. திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே டீசலை ஏற்றிக் கொண்டு ஆந்திரா நோக்கி புறப்பட்டுச் சென்ற சரக்கு ரயில் நேற்று முன்தினம் (ஜூலை 13) அதிகாலை 5.20 மணியளவில் திடீரென தடம் புரண்டது. இதனால் இன்ஜினுக்கு அடுத்ததாக உள்ள பெட்டிகள் தீப்பிடித்தன. 52 பெட்டிகளைக் கொண்ட சரக்கு ரயிலில் 4 பெட்டிகள் தீயில் முழுமையாக சேதமடைந்துள்ளன. இதனால் திருவள்ளூர் வழியாக செல்லக்கூடிய அனைத்து மின்சார மற்றும் எக்ஸ்பிரஸ் ரயில்களும் நிறுத்தப்பட்டுள்ளன. ஆவடி மற்றும் அரக்கோணத்தில் இருந்து பேரிடர் குழுவை மாவட்ட நிர்வாகம் அழைத்து மீட்பு பணியில் ஈடுபட்டார்கள் பொது மக்கள் பயணம் செய்வதற்கு வசதி மாவட்ட நிர்வாகம் சார்பில் சிறப்பு பேருந்துகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

திருவள்ளூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் உள்ள தீயணைப்பு நிலையங்களில் இருந்து 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் மூலம் வீரர்கள் விரைந்து வந்து தீவிர முயற்சியில் ஈடுபட்டு தீயை கட்டுக்குள் கொண்டு வந்தனர். முன்னதாக தகவல் அறிந்த தமிழ்நாடு சிறுபான்மை யினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் விபத்துக்குள்ளான இடத்தை உடனடியாக நேரில் சென்று பார்வையிட்டார்.

அப்போது தீ விபத்துக்குள்ளான இடம் அருகே ஒரு பெண்மணி வீட்டிலிருந்து கேஸ் சிலிண்டரை தூக்க முடியாமல் அவதிப்பட்டு வந்தார். இதைப் பார்த்த அமைச்சர் உடனடியாக அந்த சிலிண்டரை தூக்கிக் கொண்டு சென்று மீட்பு பணியில் ஈடுபட்டார் .

மேலும் பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளில் உள்ளவர்களுக்கு நேரில் சென்று ஆறுதல் கூறி, அவர்களுக்கு உணவு, பால், குடிநீர் உள்ளிட்டவைகளை வழங்கினார்.

தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்து அமைச்சர் ஆவடி நாசர் பேசுகையில்,

சென்னை, ஐ.ஓ.சி.எல் மணலியில் இருந்து ஜோலார் பேட்டை நோக்கி பெட்ரோலியப் பொருட்கள் (எண்ணெய்) ஏற்றிச் சென்ற ரயில் (52 பெட்டிகள்) அதிகாலை 5.20 மணிக்கு திருவள்ளூர் ரயில் நிலையம் அருகே தீப்பிடித்து விபத்துக்குள்ளானது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவுக்கிணங்க மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட நிர்வாகம் சார்பாக முன்னெச்சரிக்கை மற்றும் மீட்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள உத்தரவிட்டு. அனைத்து பணிகளும் துரிதமாக நடைபெற்று வருகிறது.

52 ரயில் பெட்டிகளில் நான்கு பெட்டிகள் முற்றிலுமாக எரிந்து சேதமடைந்தது மீதமுள்ள பெட்டி எரிந்து கொண்டிருந்த நிலையில் உள்ளது. அதை அணைக்கும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த விபத்தால் ரயில் போக்குவரத்து முற்றிலுமாக தடைப்பட்டு உள்ளது. இதற்கு மாற்று ஏற்பாடாக பேருந்து வசதிகள் போக்குவரத்து துறை வாயிலாக ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. விபத்து நடைபெற்ற பகுதியை சுற்றியுள்ள மக்களுக்கு அடிப்படை வசதிகளான உணவு, குடிநீர் மற்றும் தங்குவதற்கான தற்காலிக இடங்கள் ஆகியவை ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அரசு மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்களில் உள்ள மருத்துவர்கள் செவிலியர்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டு அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளுக்கும் மாவட்ட நிர்வாகம் சிறப்பாக முறையில் செயல்பட்டு துரிதமாக நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர் என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் தெரிவித்தார்.

அந்த ஆய்வின் போது ரயில்வே ஐ.ஜி எ.ஜி பாபு, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சீனிவாச பெருமாள், மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், நகர மன்ற தலைவர் உதயமலர் பாண்டியன், நகர் மன்ற துணைத் தலைவர் சி.சு.ரவிச்சந்திரன், அரசு அதிகாரிகள் காவல்துறையினர் தீயணைப்பு வீரர்கள் ரயில்வே துறை அதிகாரிகள் கழக நிர்வாகிகள் நகர மன்ற உறுப்பினர்கள் பலர் இருந்தனர்.




நீலகிரி மாவட்டம் குன்னூர் அருவங்காடு பேருந்து நிறுத்தம் அருகில் ஜகதளா பேரூர் கழக செயலாளர் சஞ்சீவ் குமார் ஏற்பாட்டில் அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன் புதிய ஆட்டோ ஸ்டாண்டினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார். உடன் குன்னூர் ஒன்றிய செயலாளர் பிரேம்குமார் உட்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### தஞ்சை வடக்கு மாவட்டம், திருப்புறம்பியத்தில் நாடு போற்றும் நான்காண்டு

# திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் !

## மாநில கொள்கைப்பரப்பு துணை செயலாளர் நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரை!

தஞ்சாவூர், ஜூலை 15-

தஞ்சை வடக்கு மாவட்டம், கும்பகோணம் அருகே திருப்புறம்பியத்தில் ஆதிதிராவிடர் நலக்குழு சார்பில் கலைஞர் பிறந்தநாள் விழா மற்றும் நாடு போற்றும் நான்காண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க பொதுக்கூட்டம் நடைபெற்றது.

கூட்டத்திற்கு கும்பகோணம் மேற்கு ஒன்றிய செயலாளர் எஸ்.கே.முத்துசெல்வம் தலைமை வகித்தார். மாவட்ட அமைப்பாளர் கோபிநாத், மாவட்ட தலைவர் செல்வராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் மணிமாறன், கிருபாகரன், சுப்பிரமணியன், துரைசாமி மற்றும் முருகமணி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேற்கு ஒன்றிய துணை செயலாளர் தங்க.தியாகராஜன் அனைவரையும் வரவேற்றார்.

கூட்டத்தில் மாநில கொள்கை பரப்பு துணை செயலாளரும், கழக பேச்சாளருமான நெல்லிக்குப்பம் புகழேந்தி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப. தமிழழகன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் சுபா திருநாவுக்கரசு, அ. சண்முகநாதன், வழக்கறிஞர் விஜயகுமார், மேற்கு ஒன்றிய நிர்வாகிகள் சண்முகம், அனிதா செல்வராஜ், இளங்கோ, மணிவாசகம், மாவட்ட பிரதிநிதி அன்பழகன் மற்றும் கும்பகோணம் மாநகர, மத்திய, கிழக்கு ஒன்றிய நிர்வாகிகள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி நிர்வாகிகள், சுவாமிமலை, சோழபுரம், திருநாகேஸ்வரம் பேரூர் நிர்வாகிகள் உள்ளிட்ட நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

கூட்ட நிறைவாக மேற்கு ஒன்றிய பகுதி கழக செயலாளர் கோவிந்தராஜன் நன்றி கூறினார்.



கோவை மாநகர் மாவட்ட தி.மு.க, வீரகேரளம் பகுதி கழக இளைஞர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 பிறந்தநாள் விழா, கழக அரசின் நான்காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் வீரகேரளம், அண்ணா திடலில், வடவள்ளி பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ர.மனோஜ்குமார் வரவேற்புரையில், வீரகேரளம் பகுதி பொறுப்பாளர் பாபு (எ) பாலசுப்ரமணியம், கழகத் தகவல் தொழில்நுட்ப பணி துணைச் செயலாளர் அ.தமிழ்மறை, மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் இரா.தனபால், மண்டலத்தலைவர் கே.ஏ.தெய்வானை, மாமன்ற உறுப்பினர் பத்மாவதி ரவிச்சந்திரன், பொதுக்குழு உறுப்பினர்கள் ச.குப்புசாமி, தங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கோவை துரைமுருகன், சு.கா.சுகன் மந்த்ரன் சிறப்புரையாற்றினர். இதில் சிடிசி ராஜன், சேகர், செந்தில், வழக்கறிஞர் சிவகுமார், வடிவேல், சிவசாமி, அஜித், பாலு, அண்ணாதுரை, நிரஞ்சன், மாதவ், சரத், தேவா, பிரகதீஷ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.